இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை ஆனி, 2012.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu
sondak@eureka.lk

No. 19, Saravana Road
Kallady Batticaloa.
sondbati@eureka.lk

60" Arasady Road
Jaffna
sondjf@eureka.lk



SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## கிரான் பிரதேச அனர்த்த முன்னாயத்த திட்டமிடல்

கிரான் பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்திவரும் அனர்த்த முன்னாயத்த திட்டமிடல் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் தலைமையில் அனர்த்தம் தொடர்பாக கிரான் பிரதேச செயலக பிரிவில் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் செயற்படுவதற்கான கலந்துரையாடல் 13.06.2012 பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் 18 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குமான வரைபடம், கிராமமட்ட தகவலை பெறுவதற்கான திகதிகள் குறிக்கப்பட்டது .மேலும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆலோசனைகளுக்கமைவாக இணைந்து செயற்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது



## இயற்கை வளங்களை பாதுகாத்தல்

பெரிய உப்போடை பிரதேசத்தில் சமாதான அமைப்பின் அனுரணையுடன் இடம்பெற்ற புரிந்துணர்விற்கான சமாதான சிரமதான வேலைத்திட்டத்தின் தொடர் முன்னெடுப்பு கலந்துரையாடல் 25.06.2012 அன்று டயகோனியா அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கண்டியில் இருந்து வருகைதந்து சிரமதானத்தில் பங்குகொண்ட மக்களுடனான உறவினை வலுப்படுத்தும் முகமாக பெரிய உப்போடை மக்கள் 30 பேர்கொண்ட குழுவினை கண்டிக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.இக்கலந்துரையாடலில் சமாதான அமைப்பின் தலைவர் பெரிய உப்போடை மக்கள் மற்றும் ஆலோசகர் சொர்ணலிங்கம்,மாநகர சபை உத்தியோகஸ்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மரம் நடுகை மற்றும் நகர் அழகுபடுத்தல் திட்டம்

மட்டக்களப்பு நகர் பகுதியில் நடப்பட்ட 09 மரங்கள் பழுதடைந்துள்ளதால் இந்த இடத்திலே 09 மரங்கள் இம்மாதம் (சித்திரை வேம்பு) நடப்பட்டுள்ளது. அத்துடன் வழமையாக வாரத்திற்கு இரண்டு தடவை மாநகரசபையின் உதவியுடன் மரத்திற்கு நீர் ஊற்றப்பட்டு வருகின்றது.

SOND

## முன்பள்ளிப் பாடசாலை தொடர்பானது

எதிர் கால மாணவர்களின் நலத்தினைக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி, கழுதாவளை, புதுக்குடியிருப்பு, ஓட்டமாவடி ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவிலும் நான்கு முன்பள்ளிப் பாடசாலைகள் இயக்கி வருகின்றது.

இம்மாதத்துக்கான பாடசாலை செயற்பாடாக நாம் 07.06.2012.திகதி YMHA பாடசாலைக்கு பஞ்ச தந்திரக்கதை, குழந்தைகளுக்கான பாடல் எனும் கருத்துக்கள் அடங்கிய இறுவெட்டினை திரையிட்டு இருந்தோம். இதற்கு 11பெண் மாணவர்களும் 16ஆண் மாணவர்களும் ஒரு ஆசிரியர்கள் உட்பட இதனை ஆர்வத்துடன் கண்டுகழித்தார்கள்.

## Create a conducive society with good environment for the human life.

### நடை பெற்ற கலந்துரையாடல்.

| இல | சங்கம் | நடைபெற்ற கலந்துரையாடல் | காலம் | மொாத்த உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| 01 | வாதக்கல்மடு கமநல அமைப்பு | பொதுக்கலந்துரையாடல் | 03.06.2012 | 35 |
| 02 | | | 10.06..2012 | 29 |
| 03 | | | 17.06.2012 | 36 |
| 04 | கல்லடி வேலூர் காளியம்மன் தாய்மார் சங்கம் | | 16.06.2012 | 11 |
| 05 | ஏறாவூர்-6 கிராமத்திலுள்ள பெண்கள் அமைப்பு | மாதாந்த கலந்துரையாடல் | 12.06.2012 | 26 |

எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

- வேளாண்மையினை நாசப்படுத்தும் மாடு, ஆட்டு உரிமையாளர்களுக்கு நடவடிக்கை எடுத்தல்
- 10.07.2012 பின்னர் தான் அனைவரும் தங்களுடைய வயலை அறுவடை செய்தல் வேண்டும்.



## இலவசச் செயற்பாடு

ஒவ்வொரு மாதமும் தரும செயற்பாடுகளை முடிந்தளவு செய்யவேண்டும் என்பதற்கிணங்க முதற்கட்டமாக- இம்மாதம் கல்லடி முதியோர் இல்லத்திற்கு பணியாளர்கள் அனைவரும் சேர்ந்து இரவு உணவு சேகரித்து கொடுக்கப்பட்டது. இப்பணியில் கனணி கற்கும் இரு சிறுவர்களின் பெற்றோர்கள் உணவு தந்து உதவினார். இவ் செயற்ப்பாட்டினை தொடர்ந்தும் செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

SOND

## கனணி வகுப்பு

இம்மாதம் புதிதாக 11 பேர் கனணி கற்பதற்காக இணைந்து கொண்டுள்ளார்கள்.

இம்மாதம் வள நிலைய கனணி கற்றுக்கொண்டோர் விபரம்

| இல | கற்பவர்களின் விபரம் | Practical | | Theory | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 01. | சிறுவர்கள் | 28 | 23 | 26 | 10 | 87 |
| 02. | அரச ஊழியர்கள் | - | 1 | - | 1 | 2 |

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்.

**Create a conducive society with good environment for the human life.**

## சேவை வழங்குனர்களை தொடர்புபடுத்திவிடல்.

16/05/2012 அன்று RRF அமைப்பின் நிர்வாக உறுப்பினர்களுடன் சேவை வழங்குனர்களைத் தொடர்புபடுத்திவிடல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதற்கிணங்க 24/05/2012 அன்று அக்கரைப்பற்றில் செயற்பட்டுவரும் அபிவிருத்தி சார் வங்கிகளில் ஒன்றான Pan Asia Bank இனுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் சங்கத்தினுடைய பொது உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடலானது பி.ப. 03.30 மணிக்கு RRF அலுவலகத்திலே நடைபெற்றது. 5 உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கும் செயற்பாடுகள் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிகழ்வில் SOND உத்தியோகஸ்தர்கள் உட்பட 40 சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## நிர்வாகக் குழுக் கூட்டம் -RRF

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் செயற்பட்டுவரும் RRF அமைப்பினுடைய நிர்வாகக் குழுக் கூட்டமானது 16/06/2012 அன்று அவ்வமைப்பின் அலுவலகத்தில் பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர்கள் சார்பாக 7 பேரும் SOND அமைப்பின் சார்பில் திட்ட உத்தியோகஸ்தரான த. விஜயகுமார் அவர்களும் கலந்துகொண்டனர்.

## பொதுக் கூட்டம் -We & Do சங்கம்.

19/06/2012 அன்று பி.ப. 4.00 மணிக்கு We & Do சங்கத்தினுடைய பொதுக்கூட்டமானது அங்கத்தவர் ஒருவரினுடைய வீட்டிலே நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு சங்க உறுப்பினர்கள் 22 மற்றும் SOND உத்தியோகஸ்தரும் மற்றும் சங்கத்தினுடைய நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை அதிகரித்தல், அங்கத்தவர்களினுடைய சங்க ரீதியிலான செயற்பாடுகளைத் துரிதப்படுத்தல், கடந்த காலங்களில் Diakonia அமைப்பின் அனுசரனையில் SOND அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் மற்றும் அதன் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மற்றும் நடப்பாண்டில் Women income generation activities எனும் தலைப்பின் கீழ் செய்ய எதிர்பார்க்கும் செயற்திட்டம் பற்றிய முன்மொழிவுகள் மற்றும் சேவை வழங்குனர்களினுடைய சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாகவும் இரு தரப்பிலும் கலந்துரையாடப்பட்டது.





SOND

## பாலர் பாடசாலை

பாலர் பாடசாலையின் இம்மாத செயற்பாடுகள், முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு கலந்துரையாடலானது 2012.06.12 ஆம் திகதி அன்று மாலை 02.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 15 முன்பள்ளியைச் சேர்ந்த 28 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. எதிர் வரும் மாதாந்த கலந்துரையாடலின் போது சம்சுல் உலூம் பாலர் பாடசாலை ஆசிரியர்களினால் கற்றல் செயற்பாடுகள் எனைய ஆசிரியர்களுக்கு செயல்முறைபயிற்சியின் ஊடாக செய்து காண்பிக்கப்படும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
2. எதிர் வரும் ஒக்டோபர் மாதம் சிறுவர் தினத்தினை முன்னிட்டு அனைத்து பாலர் பாடசாலை ஆசிரியர்களும் உங்களது பாலர் பாடசாலைச் சேர்ந்த ஒரு சில மாணவர்களை நிகழ்ச்சிகளோடு அழைத்துக்கொண்டு எமது அலுவலகத்திற்கு வருகை தந்து மாணவர்களுக்கிடையே நிகழ்ச்சிகள் செய்வதாகவும். மற்றும் இந்நிகழ்ச்சி ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 1 தொடக்கம் 14 ஆம் திகதிக்குள் ஏதாவது ஒரு திகதியினை தீர்மானித்து நிகழ்ச்சிகள் செய்வதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

| இல | திகதி | பாலர் பாடசாலையின் பெயர் | திரைப்படத்தின் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 2012.06.14 | சம்சுல் உலூம் | எலியின் புரட்சி<br>நல்ல பழக்கவழக்கங்கள் | 11 | 17 | 28 |
| 02 | 2012.06.23 | கலைமகள் அம்மன் | எலியின் புரட்சி<br>நல்ல பழக்கவழக்கங்கள்<br>பஞ்ச தந்திரக் கதைகள் | 19 | 21 | 40 |





SOND

# சிறுவர் திட்டம்

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் கலந்துரையாடலும்,திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்படுகின்றது. அவ்வாறு நடைபெற்ற கலந்துரையாடலின் விபரமும் கலந்துகொண்ட சிறுவர்களின் விபரமும் கீழ்வருமாறு

| இல | திகதி | கலந்துரையாடல் நடாத்திய பணியாளரர் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.06.03 | தி.ஜெனிதா | 04 | 04 | 08 |
| 02 | 2012.06.10 | | 08 | 06 | 14 |
| 03 | 2012.06.17 | | 05 | 11 | 16 |
| 04 | 2012.06.24 | | 10 | 11 | 21 |

நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

1. தற்போது சிறுவர்களின் வரவு மிகவும் குறைவாக காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம் என கழக தலைவரான சனத் என்பவர் சமூகமளிக்காத சிறுவர்களை சந்தித்து காரணம் எழுத்து மூலம் அவர்களின் கையொப்பத்துடன் ஒப்படைக்க வேண்டும் என கூறப்பட்டது.

2. 2012.06.10 ஆம் திகதி அன்று கலந்துரையாடலுக்கு சமூகமளித்த சிறுவர்களை 3 குழுவாக பிரித்து சிறுவர்காளாகிய உங்களால் நடைமுறைப்படுத்தப்படும் இலவச செயற்பாடுகளை எழுத்து வடிவில் தயாரித்து தருமாறு குழுச்செயற்பாடு வழங்கப்பட்டது.அதற்கமைவாக அன்றைய தினம் வருகை தந்த சிறுவர்கள் செயற்பாடுகளை எழுத்து வடிவில் அமைத்து ஒவ்வொரு குழுத் தலைவரும் சிறுவர்கள் முன்னிலையில் வாசித்துக் காட்டினார்கள்.

3. கலந்துரையாடல் முடிவுபெற்றவுடன் அனைத்து சிறுவர்களுக்கும் திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் 17,24 ஆம் திகதிகள் அன்று காந்தி கழக சிறுவர்களுக்கு இரண்டு சிங்கள வகுப்பு கழக தலைவாரான சனத் தலைமையில் நடைபெற்றது. இவ் வகுப்பில் 10 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

02. 2012.05.19 ஆம் திகதி அன்று அக்கரைப்பற்று 8 பிரிவிலுல் நடமாடும் நூலசேவையின் ஊடாக வழங்கப்பட்ட புத்தங்களை மீண்டும் அதனை பெறுவதற்காக இம் மாதம் 26ஆம் திகதி அன்று சென்றுள்ளார்கள்.





# சிறுவர் திட்டம்

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு ஆங்கில வகுப்பு பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினால் நடாத்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

ஆங்கில வகுப்பு

| இல | திகதி | கற்பித்த பணியாளர் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.06.03 | கீ.சுரேஸ்குமார் | 05 | 03 | 08 |
| 02 | 2012.06.10 | | 04 | 02 | 06 |
| 03 | 2012.06.17 | | 05 | 05 | 10 |
| 04 | 2012.06.24 | | 09 | 03 | 12 |

01. இம் மாதம் காந்தி கழக சிறுவர்கள் இரண்டு வகையான விளையாட்டுப்பொருட்களை 04 தடவைகள் பெற்று பயன்படுத்தினார்கள

02. சிறுவர்களுக்கு காண்பிக்கப்பட்ட திரைப்படக் காட்சி

| இல | திகதி | திரைப்படத்தின் பெயர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2012.06.03 | யூராசிக் பார்க் | 04 | 04 | 08 |
| 02 | 2012.06.10 | அக்பரும் பீர்பாலும் | 08 | 06 | 14 |
| 03 | 2012.06.17 | Ben 10 | 05 | 11 | 16 |
| 04 | 2012.06.24 | Ben 10 | 10 | 11 | 21 |





SOND

## கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 20 சிறுவர்கள் 18 தடவையும், 04 இளையோர்கள் 04 தடவையும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர்.



## தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

SWOAD அமைப்பில் computer hardware பயிற்சியினை முடித்து இப் பயிற்சியினை தொடர்வதற்காக 7பேர் எமது அமைப்பில் இணைந்துள்ளார்கள். இவர்களுக்கு எமது அமைப்பின் விதிமுறைகள் பற்றியும் இக் கால கட்டத்தில் எமது அமைப்பில் கற்கும் விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள் ஆகியோர் இம்மாதம் 7 தலைப்பில் 29 புத்தகங்களையும் 6 தலைப்பில் 42 இறுவெட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

## கலந்துரையாடல், பயிற்சி

### திட்ட முன் மொழிவு தயாரிக்கும் கலந்துரையாடல்

திட்ட முன் மொழிவு தயாரிப்பதற்கான தகவல்கள் பெறும் கலந்துரையாடலானது 2012.06.18 ம் திகதி பணியாளர் விஜயகுமாரின் தலைமையில் எமது அலுவலகத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

# SOND யாழ்மாவட்டத்தின் செயற்பாடுகள்

**Mine Risk Education - மிதிவெடி அபாயக்கல்வி செயற்த்திட்டம்**

22,23.06.2012 ஆகிய இரு தினங்களும் MRE பணியாளர்களுக்கான **Capacity Building Training** சேவாலங்கா நிறுவனத்தில் நடைபெற்றது.





## Nakarkovil ResettlementProgram





## Palai Ithavil ResettlementProgram





## MRE to Indian Returnees Program





## MRE to Indian Returnees Program





## Palai Division Community Program



SOND

# Palai D.S Office Safety briefing





# School Oriented MRE





SOND

## Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

19.06.2012 நாவாந்துறை தெற்கு சென்நீக்லஸ் மகளிர் மன்றத்தில் சிறுவர்களுக்கான சத்துணவு திட்டத்தில் இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது..இதில் 45 மேற்பட்ட சிறுவர்கள் பயனடைந்தனர்

இத் திட்டத்தின் கீழ் நடை பெற்ற பயிற்சிகளுடைய விபரம் கீழ்வருமாறு.

| திகதி | பயிற்சித் தலைப்பு | சங்கத்தின் பெயர் |
|---|---|---|
| 03.06.2012 | கணக்கு வைப்பு முறை | தம்பாவை,கதிரிப்பாய் WRDS |
| 12.06.2012 | | சிறுப்பிட்டி WRDS மண்டபம் |
| 16.06.2012 | | சிறுப்பிட்டி WRDS மண்டபம் |
| 17.06.2012 | | புத்தூர் வடக்கு தமிழ்மதி சனசமூக நிலைய மண்டபம் |
| 19.06.2012 | | நாவாந்துறை தெற்கு சென்நீக்லஸ் சனசமூக நிலை மண்டபம் |
| 28.06.2012 | | ஆவரங்கால் கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலையம் |
| 29.06.2012 | | ஆனைக்கோட்டை WRDS மண்டபம் |

21.06.2012 திட்ட முன்மொழிவு பயிற்சியில் மாநகரசபை,நல்லூர் பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச சபை, சுழிபுரம் பிரதேச சபை,கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும் மற்றும் NSA திட்ட பணியாளர்களும் உட்பட 35 பேர் கலந்துகொண்டனர்.

இத் திட்டத்தின் கீழ் நடை பெற்ற கலந்துரையாடலின் விபரம் கீழ்வருமாறு.

| திகதி | கலந்துரையாடல் வகை |
|---|---|
| 18.06.2012 | கோப்பாய் மக்கள் மன்ற கலந்துரையாடலானது |
| 23.06.2012 | பொதுசன சமூக அமைப்புகளை வலுவூட்டலுக்கான உபாயம் வகுத்தலுக்கான கலந்துரையாடலில் |
| 23.06.2012 | பொது ஒருங்கிணைப்புக்குழு கலந்துரையாடலானது |
| 28.06.2012 | சண்டிலிப்பாய் மக்கள் மன்ற கலந்துரையாடலானது |
| 30.06.2012 | யாழ்பாண மக்கள் மன்ற கலந்துரையாடலானது |
| 23.06.2012 | பொது ஒருங்கிணைப்புக்குழு கலந்துரையாடலானது |

SOND






அரசுசாரா செயற்பாட்டாளர்களின்
EC- Non State Actors in Development


அரசுசாரா செயற்பாட்டாளர்களின்
அபிவிருத்திச் செயற்திட்டம்
EC- Non State Actors in Development Project


மக்கள் மன்றம்
கோப்பாய்
People Forum - Kopay




ஒருங்கிணைப்புக் குழு
யாழ்ப்பாணம் மாவட்டம்
Coordination Body-Jaffna district

SOND

## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.